# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.124/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கேசவன் | Father's Name | : | ஜெயபாலன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 20th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அப்பல்லோ பார்மஸிஸில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் பார்மஸி 24 மணி நேரமும் இயங்க கூடியது. ஆஜர் எதிரியை தெரியும். 15.02.2025 அன்று காலை 8.30 மணியளவில் மணிகண்டன் என்பவர் தெற்கு வீதி மெயின் ரோட்டில் கையில் பெரிய வீச்சருவாளை வைத்துக்கொண்டு போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறாக சாலையில் செல்வர்களை மிரட்டி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். நான் கைபேசி மூலம் திருவாரூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.20 15:05:39 +0530

கொடுத்தேன். அங்கு வந்த போலீசார் அவரை பிடித்து விசாரித்தார்கள். பின் அவர் கையிலிருந்த வீச்சருவாளை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் என்னுடன் வேலை பார்த்த சிலம்பரசன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1**. மேற்படி அருவாள் **சா.பொ.1**. அப்போது காலை 9.30 மணியிருக்கும். பின் மணிகண்டனை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று காலை 11.00 மணிக்கு மீண்டும் வந்த நகர காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் என்னுடன் வேலை பார்த்த சிலம்பரசன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 ஆவணங்களில் போலீசார் கேட்டுக் கொண்டதால் கையெழுத்துக்களை போட்டேன் என்றால் சரி. அந்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.20 15:05:48 +0530

கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.20 15:05:54 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.